RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1516

OPEN ACCESS

# திருவேங்கடத்தந்தாதியில் திருமால் பெருமைகள்

பி. ஸ்ரீதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு ஞாபகார்த்த கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா

# Thirumal Prides Himself in Thiruvenkatathanthadi

P. Sridevi [a, *]

[a] Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: srivenki2000@gmail.com

Received: 14-06-2022
Revised: 17-09-2022
Accepted: 03-10-2022
Published: 09-12-2022

Check for updates

**ABSTRACT**

One of the genres of Tamil literature is Chirlitakyaam. Antadi is one of the small literatures. This Thiruvenkatathandathi appeared during the Nayak period. The love and devotion of Manavaladasa, who composed it, towards Thiruvenkatathan can be seen in this article. Tirumal's many glories are highlighted and compared to the sufferings of human life. In this article, we can see the message of seeking God while living. There are many messages in this article about praying to Thirumal not to take birth and sending messengers.

**Keywords:** Tiruvenkarathanthathi, Thirumal Ghods, Vaikundam, Dasar's Prayer

## முன்னுரை

நாயக்கர் காலச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக அமைவது அந்தாதி. பிள்ளைப் பெருமாளையங்கார் என்றழைக்கப்படும் அழகிய மணவாளதாசரால் இயற்றப்பட்டது திருவேங்கடத்தந்தாதி. இவரைத் 'திவ்வியகவி' என்னும் சிறப்புப் பெயர் கொண்டும் அழைப்பர். இவர் சோழவள நாட்டில் வைணவ பிராமண குலத்தில் பிறந்தவர். தமிழ், வடமொழி இரண்டிலும் சிறந்த புலமையுடையவர். திருமாலின் மீது கொண்டுள்ள அளப்பரிய பக்தியினால், திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை போன்ற நூல்களை எழுதியுள்ளார். அந்தாதி என்பது ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, சீர் அல்லது தொடர் ஒன்றாக வரும்படி அமைப்பதாகும். ஆதியும் முதலும் ஒன்றாய் அமைவது போல் வருவது அந்தாதி.

இந்நூலுள் மொத்தம் 107 பாடல்கள் உள்ளது. பிள்ளைப் பெருமாள் அவர்கள் மிகச் சிறப்பாக இந்நூலை அமைத்துள்ளார். இதில் திருமால், திருமகள், திருவரங்கம், திருமாலின் அவதாரச் செய்திகள் இவை யாவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் முழுவதும் யமக அந்தாதியில் அமைந்தது.

"யமக அந்தாதியாவது பாட்டின் நான்கடிகளிலும் முதற்சீரில் வந்த எழுத்துக்களே பொருள் வேறுபட அமைவதாகிய மடக்கு என்னும் அணி பொருந்தி ஒரு செய்யுளின் முடிவில் (அந்தத்தில்) உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த செய்யுளின் முதலில் அமைந்து வரப்பாடுகின்ற ஒருவகைப் பிரபந்தம் ஆகும். திருவரங்கத்தந்தாதியும் இந்தப் பிரபந்த இலக்கணத்தைக் கொண்டே எழுதப்பட்டுள்ளது" (Kaliya perumal, 1976).

## வேங்கடத்து மாயவனின் பெருமைகள்

வேங்கடத்து மாயவன் மெய்ப்பொருள் இன்பமாய் உள்ளவன். அவரே எல்லா உயிருள்ளும் உறைந்திருப்பவனாதலால் மெய்ப்பொருள் இன்பம் தருபவன் ஆகிறான். மாயோன் ஆகிய திருமால் காசிபருக்கு மகனாகத்தோன்றி, வாமன வடிவமெடுத்து, மகாபலி அசுரனிடத்தில் யாசகம் கேட்டு மூன்றடி மண் தானம் பெற்றார். திருவிக்கிரம அவதாரம் எடுத்து உலக முழுவதும் ஓரடியால் அளந்து பின் ஆகாயத்தையும் ஓரடியால் அளந்தார் என்ற செய்தியும் உள்ளது.

திருவேங்கடத்தானுடைய திருவடிகள் உள்ளத்தில் குடிபெயர்ந்ததால், பிறவி நோய்கள் யாவையும் தன்னைவிட்டு நீங்கும்படிக் கூறியுள்ளார். ஆதலால் அழகிய மணவாளதாசரின் உயிர் திருமால் வசம் உள்ளது என்கிறார்.

"வேங்கடத்தா னீர விரும்புண்டரீகப்பொற் பாதங்க ளென்னுயிரைத்

தீர விரும்புண்ட நீராக்கு மாறுள்ளஞ் சேர்ந்தனவே" (Pillai Perumal Iyengar, 1906)

சடாயுவின் மரணத்தறுவாயில், முக்திக்குச் சேர்த்த திருமால் ஆகையால், மக்கள் அனைவரும் மரணத்தறுவாயில் உண்டாகும் பயமின்றி இருக்கலாம். திருமால் காப்பாற்றுவார் என்கிறார் தாசர். மேலும் சுக்ரீவனுக்கு முடி சூட்டிய செய்தி, முருகப்பெருமான் சரவணமடுவில் ஆறு குழந்தைகளாக அவதரித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. உமையம்மை ஆறு குழந்தைகளையும் கையில் எடுக்க, அவை ஓருடல் ஆகியமையால், அவனுக்குக் கவந்தன் என்ற பெயர் வந்தது. அந்தக் கவந்தனை அழித்தவன் வேங்கடநாதன், அப்படிப்பட்டவரை மறத்தல் நியாயமில்லை என்கிறார்.

உயிர் திருமாலுக்கே உரியது என்றாலும், ஐம்பொறிகளின் செயல்பாடுகளில் ஒன்றாகிய பேராசையானது, அறிவிற்குச் சம்மதமில்லாதவற்றைச் செய்கிறதென்கிறார்.

கடல் செய்த தவம் தான் என்னவென்று, கடலிடம் வினவுகிறார். அதே தவத்தைத் தானும் செய்தால், தன்னிடத்தில் வந்து திருமால் உறங்குவார் என்கிறார். அஞ்சனமலையை யுடைய இறைவனை வாழ்த்தாமல், மக்கள் விலங்கு போலத் திரிகின்ற கீழ் மக்களை விட்டு தன் மனத்தை விலகிவிடு என்கிறார். வேங்கடநாதரை துதிக்காத மக்கள், உயர்ந்த குலத்தில் பிறந்தோரேயாயினும், அவர்கள் தாழ்ந்தவரே என்கிறார். பிறவியால் அகப்பட்ட மற்றத் தெய்வங்களை பிறவி போகும் படி வேண்டினால், அது அறியாமை என்கிறார்.

வேங்கடத்தில் நின்ற திருக்கோலம், பாற்கடலில் கிடந்த திருக்கோலம், வைகுந்தத்தில் இருந்த திருக்கோலம், நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்கள் பாற்கடலிலும், வைகுந்தத்திலும் நடந்ததைப் போல தன்னெஞ்சும் இடமாக உள்ளது திருமால் தங்கிக் கொள்வதற்கு என்கிறார். இறைவன் அலைவற்று நின்றும், கிடந்தும் இருப்பதற்காகவே தனித்து வைத்திருப்பதனால், தன்நெஞ்சைத் 'தனி நெஞ்சம்' என்கிறார் தாசர். இங்கே கண்ணன் அவதாரத்தின் போது, வடமதுரையில் கம்சன் அரண்மனையில், அவனால் ஏவப்பட்ட குவலையா பீடமென்னும் யானையின் தந்தத்தை முறித்த செய்தியும் இடம் பெறுகிறது.

பூமியையளந்த திருவடிகளையுடைய திருமாலைக் காண அனைவரும் திருவேங்கட மலைக்கு வரவேண்டும். வேங்கடநாதனை வழிபட்டால் அவன் பரமபதம் தந்திடுவான். காரணம் கஜேந்திரனுக்கு கதி மோட்சம் வழங்கிய இறைவன் தாமதிக்காமல் அது அழைத்த உடனேயே வந்து விட்டார். ஆதலால், ஒளிமிக விளக்குகின்ற பரமபதத்தை வேண்டி விரும்பிக் கேட்பவர்களுக்கு அதனைக் கண்டிப்பாக அருளுவான் என்கிறார்.

இலங்கைக்கு அதிபதியாக விளங்கிய இராவணனை அளித்த திருவேங்கடநாதனின் திருவுந்தித் தாமரையிலிருந்து பிரம்மா முதல் எல்லா சீவராசிகளும் தோன்றியது. இரணியனை வதம் செய்ய நரசிம்ம அவதாரம் எடுத்த செய்தி, கடவுள் விஸ்வரூப வடிவெடுக்கும் போது, உலகம் முதலான அனைத்தும் சிரியதாகிவிடும். உலகம் ஒரு துகளாகும், சமுத்திரம் ஒரு துளியாகும், வடவாமு காக்கினியானது. ஒரு சிறிய தீப்பொறியாகும். பரந்த தூய ஆகாயம் விரல் இடுக்கில் தோன்றுகிற

வெளியாகும் என்று காட்சிப் படுத்தியுள்ளார். பூமியை கடலுக்கு அடியில் கொண்டு சென்ற இரணியசுரனை அளித்த வராகவதார செய்தி.

கஜேந்திரன் ஆதிமூலமே! என்றழைத்ததும், சக்ராயுதத்தினால் முதலையைப் பிளந்து கொன்றவன் திருமால். இத்தகைய செயலைப் பார்த்த பின்னும் தலைவர் என்று பெயர் சொல்லித் திரியும் தேவர்களுக்கு வெட்கமில்லை என்கிறார். எம்பெருமானின் திருவடித் தீர்த்தமாகிய கங்கையை சிவபிரான் தலையில் தரித்திருகிறார். ஆதலால் வேங்கடவனே சிறந்தவன் என்கிறார்.

## வைகுண்டம்

வைகுண்டம் என்பதற்கு உரையாசிரியரான நாராயணசாமி ஐயன், கூறும் பொருள் வேறுவிதமாய் உள்ளது. அந்தணன் மனைவி விகுண்டை என்பவள், திருமால் தனக்கு மகனாகப் பிறக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு, தவம் செய்த படியால், அவளுக்கு வரம் கிடைத்தது. அவள் கேட்ட வரம் கிடைக்கப் பெற்று திருமாலை மகனாகப் பெற்றாள். மாயோன் தாயின் வாக்கினை மதித்து, ஒரு பட்டணம் ஒன்றை அமைத்து அதற்குத் தாயின் பெயரைச் சூட்டினார். அது எக்காலத்தும் மாறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக 'வைகுண்டம்' என்ற பெயர் வைத்திருப்பதாய் எழுதியுள்ளார்.

## கடவுளை மானிடப் பெண்டிர் விரும்பிய பகுதி

மணவாளதாசர் பல இடங்களில் திருமாலைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் நினைத்துப் பாடியுள்ளார். அன்றிற்பறவை தன் துணையை அழைப்பதற்காக மாலைக் காலத்தில் கத்தும் ஓசை தலைவிக்கு வேதனையை உண்டாக்குகிறது. அப்படி வேதனைப் படும் தலைவியைக் கண் பார்த்து அருளும் படிப் பாடுகின்றார். தனித்திருக்கக் கூடிய தலைவி, ஒரு நாளின் இரவுப் பொழுது கழிவதற்குள், அவளுக்கு ஐந்துயுகப் பொழுதின் வேதனையை அந்தத் தனிமை வழங்குவதாகக் கூறுகிறார்.

திருவேங்கடத்துத் திருமாலை யெண்ணி, விரக வேதனையால் வாடும் தலைவியின் நிலைக்கு நிலவின் செயலை ஒப்பிடுகிறார். நிலவும் திருமாலின் மீது அன்பு கொண்டதால் தான் தேய்ந்து உருகி, நிறம் வெளுத்து உள்ளதென்றும், தலைவியும் அப்படித்தான் ஆகியிருக்கிறாள் என்றும் கூறியுள்ளார். இப்பகுதியை அகப்பொருள் பாணியில் துறைகள் வைத்துப் பாடியுள்ளார். ஏறக்குறைய 15 துறைகளில் பெண்கள் திருமாலை வேண்டி விரும்பி ஏங்கிய நிலையினைக் கூறியுள்ளார்.

1. பிரிந்த தலைவி வருந்தியது அறிந்த தோழி புலம்பல்.
2. மடலவிழ் கோதை கடலொடு புலம்பல்.
3. தலைவி தலைமகன் ஊருக்குச் செலவொருப்படுதல்.
4. பூங்கொடி துயர் கண்டு பாங்கி புலம்பல்.
5. புலம்புறு தலைவி நலந்தொலை வறிந்து, பிதிர்நகிற் பாங்கி மதியோடு புலம்புதல்.
6. தலைவன் தலைவியைத் தான் அணைந்திலன் என்று தலைவுறு பாங்கி நிலை தளர்ந்துரைத்தல்.
7. மாதர் பைங்கிளியைத் தூதுவிடுத்தல்.
8. தலைவி பாங்கியர்க்கு அறத்தொடு நிற்றல்.
9. பூங்குழை துயர் கண்டு பாங்கி இரங்குதல்.
10. ஐயனை நோக்கி கையற வுரைத்தல்.
11. வெறி விலக்கிய வழி, பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்.
12. தலைவன் பிரிதலும் தனியுறை தலைவி, சிலைநுதற் பாங்கியர்க்கு நிலை தளர்ந்துரைத்தல்
13. போதணி குழலி தூது விடுத்தல்.
14. தலைவன், ஏதங் கூறி இரவு வரல் விலக்கல்.
15. காமமிக்க கழிபடர் கிளவி
16. கண்ணனை ஆயர் சிறுமியர் கழறுதல்.

திருவேங்கடநாதனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட பாடல்கள் இவை. தலைவியின் துன்பம் தீர்த்தற்கு திருவேங்கடநாதனை அடைய வேண்டும் என தலைவி ஏங்கும் ஏக்க நிலை வெளிப்படுவதாய் அமைந்துள்ளது.

## திருமாலிடம் தாசரின் வேண்டுதல்கள்

உலகம் அழிந்து பிரம்மாக்களும் அழியும் நிலை ஏற்பட்டால், தான் மட்டும் அழியாத பரமபத நிலை அடையவேண்டும். அதற்காய் தன் வினைகளைக் கெடுக்க வேண்டும். அழியக்கூடிய இந்த உலகம் வேண்டாம் இறைவனின் அழியாத பரமபதமே வேண்டும். திருமகளுக்கு நாயகனே, தலைவனே, தன்னை பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை செய்து அருள வேண்டுமென்கிறார். தாயின் வயிற்றில் பிறக்கவும் வேண்டாம். எமனின் பாசக்கயிற்றால் இறுதிக்காலம் அறுபடவும் வேண்டாம். உலகப் பொருள்கள் மீது ஆசை வைத்தவரென்று கூறி, எம தூதர்கள் அடித்து இழுத்துச் செல்லும் வேளையில் திருவேங்கடத்தானின் அடைக்கலமாகச் செல்லவேண்டும் என்றே வேண்டுகிறார். கஜேந்திரனுக்கு அருள் செய்த திருவேங்கடத்தானுக்கும், அவரது தேவியாருக்கும் தான் அடிமைப்பட்டுக் கிடந்தும், நல்வினை, தீவினைகளில் அகப்பட்டு சுழல்வது ஏன் என்று இறைவனிடம் வேண்டி நிற்கிறார்.

மாதர்களின் போகத்தை விரும்பி நிற்பவர்கள் நிற்கட்டும், தனக்குத் திருவேங்கடநாதன் பாதங்கள் போதும். அதில் தான் சரணடைந்து விட்டதாய்க் கூறுகிறார். அதனால் கிடைக்கும் மோட்சமாகிய பரமபதம் கைவரப் பெறுதலையே இறைவனிடம் வேண்டி நிற்கிறார்.

“சித்திக்கு வித்தது வோவிது வோவென்று தேடிப்பன்னூல் கத்திக்

குவித்த பொய்ப் புத்தகத் தீர் கட்டுரைக் கவம்மி” (Pillai Perumal Iyengar, 1906)

என்று திருவேங்கடநாதனை அடைத்தலையே வேண்டி நிற்கிறார். இலங்கையை அளித்த திருவேங்கடநாதன் தன்னை ஆட்கொள்ளா விட்டால் வானில் எண்ணுவதற்கரிய நட்சத்திரங்களுக்கு நிகராகத் தனது பிறப்புத் தொழில் நடைபெற்றுக் கொண்டே இருக்கும் என்கிறார்.

## திருமால் அடியவர் பெருமை

ஐம்பூதங்களையும் படைத்து, அதனை காத்துப் பின் ஊழிக் காலத்தில் அதனை உண்டு பாதுகாத்தவன் திருவரங்கத்தான். அவனே பார்த்தனுக்கு கீதை உபதேசித்தவனும் ஆவான். அப்படிப்பட்ட மாயோனுக்கு அடிமைத் தொழில் செய்யுந் தொண்டரின் பெயரை, ஒருவன் இறக்குங் காலத்தில் மனத்தில் நினைத்தால் யமன் அவர்களை அண்ட பயப்படுவான் என்கிறார்.

"விண்டவ னந்தர மேலவன் வேங்கட மாலடிமை

கொண்டவ னந்தரத் தும்பேர் நினைக்கவுங் கூற்றஞ்சுமே" (Pillai Perumal Iyengar, 1906)

என்ற வரிகள் இதனையே உணர்த்தி நிற்கிறது. யானையின் தந்தத்தை முறித்தவனும், காளியன் தலையில் நர்த்தனம் ஆடியவனும், இரணியனைக் கொன்றவனுமாகிய திருவேங்கடத்திறைவனை நினைந்து அவருக்கே அடிமையென வாழும் அடியவர்கள் தன்னை ஒரு பொருட்டாகக் கருதாது, இறைவனின் வடிவத்தையே தியானித்திருப்பவர்களுக்கு இறைவன் தானாய் நின்று எல்லாக் காரியத்தையும் நிறைவேற்றுவிப்பான் என்கிறார்.

"தானவராகத் தடிவார் வடமலைத் தண்ணந் துழாய்

ஞான வராகர் தருமண்டம் யாவரையும் நண்ணியவர்" (Pillai Perumal Iyengar, 1906)

## மக்களுக்கு தாசர் விடுக்கும் வேண்டுகோள்

உலக மக்கள் தங்கள் தீவினை நீங்கும் பொருட்டாகத் திருவேங்கடநாதனை இப்பொழுதிலிருந்தே வணங்க வேண்டும். அவன் பிரம்மனுக்கும், ருத்திரனுக்கும் புலப்படாதவன். மக்கள் மரண காலத்தில்

திருவேங்கடநாதனை வணங்குவது என்பது அரிய செயல் ஆகையால், உடல் நன்றாய் இருக்கும் காலகட்டத்திலேயே திருமாலை உருகி வணங்க வேண்டும் என்கிறார். ஐம்புலன்களையும் மற்ற வழிகளில் செலுத்தி அதனால் கெட்டுப் போகிறவர்களைப் பாவிகள் என்கிறார். வெங்கடேச செல்வனின் பாதங்களைத் பிழைக்க வேண்டும் என்று எண்ணினால், அவர் நல்ல பதவியை மக்களுக்குக் கொடுப்பார் என்கிறார்.

“சிறக்கும் பதந்தரு வார்திரு வேங்கடச் செல்வர்செய்ய

நிறக்கும் பதந்தொழு துய்யவெண் ணீர்நெறி யிற்பிழைத்து

மறக்கும்ப தந்தியுஞ் சேலு மசுணமும் வண்டினமும்

பறக்கும் பதங்கமும் போலைவ ராற்க்கெடும் பாதகரே” (Pillai Perumal Iyengar, 1906)

யானை பரிசத்தால் படுகுழி என்றறியாமல் விழுகிறது. மீனானது வாயின் சுவையால் தூண்டிலிலுள்ள இரையை விழுங்குகிறது. அசுணம் ஓசையை கேட்டால் இறந்து போகிறது. வண்டு மூக்கால் தேனை பறிந்துண்டு மயங்கி சாகிறது. விட்டிற்பூச்சி கண்ணால் விளக்கினைக் கண்டு அதில் வீழ்ந்து மடிகிறது. இது போல ஐந்து புலன்களின் உணர்ச்சிகளிலும் மூழ்கி இறந்து போகாமல், வேங்கடத்தானின் பாதங்களைத் தொழுது பிழைக்கும் பிழைப்பை வேண்டும் படிக் கூறியுள்ளார்.

முக்தி தருவதற்கு எது காரணமென்றுத் தேடித்திரியும் மக்களுக்குத் தாசர் கூறும் அறியுரையாவது, திருவேங்கடநாதன் சாத்திரங்களைனைத்தையும் தன் வயிற்றில் அடக்கியவன். மோட்ச உலகத்தை வழங்கக் கூடியவறும் அவனே என்கிறார். ஆதலால் முத்தி தரும் இறைவனை நாடுங்கள் என்கிறார். மக்கள் அனைவரும் உண்ணும் உணவிற்காகவும், உடுத்தும் உடைக்காகவுமே பொருள் ஈட்ட அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிறப்பை ஒழிப்பதற்காக என்ன செய்ய நினைக்கிறார்கள் என்று கூறி வருந்துகிறார்.

## திருமால் பெருமைகள்

வேங்கடவனும், சங்கர நாராயணனுமாய் இருக்கக் கூடிய திருமால் கிருஷ்ணவதாரத்தின் போது, கம்சன் அனுப்பிய பூதனை என்னும் அரக்கியின் முலைப்பால் விஷத்தைக் கூடப் பருகி மகிழ்ந்தவன். அப்படிப்பட்டவனுக்குத் தாசர் பாடிய பாடல்களும் இனிக்கும் என்கிறார். மராமரத்தைத் துளைத்த பெருமை உடையவன். பாதாளத்துள்ளே திருமாலின் பாதமும், அண்டத்துக்கு வெளியில் ஆயிரந் தலைகளுமாய் விளங்க நின்றவன். முன்னாளில் திருக்கோவலூரில் அடியவர் நிமித்தமாகத்தன் உருவினை சிறியதாக மாற்றிக் கொண்ட பெருமையுடையவன்.

மாயோன் மாவலியிடத்து மண் இரந்து பெற்றதனால், திருவிக்கிரமாவதாரம் எடுத்து ஆகாயத்தை ஓரடியால் அளந்தார். அப்பொழுது பிரமதேவன் ஆகாயகங்கை நீரைத் தன் கமண்டலத்தில் முகந்து அந்தத் திருவடிகளில் அபிஷேகம் செய்தான். ஆகாயத்தை மாயோன் அளந்தமையால் அதற்கு விஷ்ணுபதமென்று பெயர். ஆகாய கங்கைக்கு விஷ்ணுபதி என்றும் பெயர். பின்னாளில் பல காலம் கழித்து அயோத்தியிலிருந்த பகீரதன் என்னும் மன்னன் கங்கையைப் பூமியில் வரவழைக்க, அக்கங்கை வரும் வேகத்தைப் பூமி தாங்காது என்றறிந்து சிவபெருமானை வேண்டினான். அப்பெருமான் தம் சடையில் தாங்கிப் பின் பூமியில் விடுத்து அருளினார் என்பது புராணச் செய்தி.

பிரமன் சிவபெருமானை நிந்தித்த பொழுது அவரேவலால் வைரவக் கடவுள் பிரம்மாவின் நடுத்தலையைக் கொய்தெடுத்தார். அப்பிரம்மனின் அந்தகப்பாலம் வைரவனின் கைகளைப் பற்றிக் கொண்டது. அத்தருணத்தில் வைரவன் யாசித்து நிற்க, அவனது அத்துன்பத்தை நீக்கிய பெருமையுடையவன் வேங்கடத்தப்பன். அப்படிப்பட்டவனே தன்னைக் காத்து அவனடியில் சேர்ப்பிக்கும் புண்ணியம் தரக் கூடியவன் என்கிறார். கரி வேண்டுமானால் ஒருநாள் பொன்னை ஒத்து மாறலாம். பிரம்மருத்திராதிகள் திருவேங்கடத்தானுக்கு ஒரு போதும் ஒப்பாகமாட்டார் என்கிறார்.

## தத்தை விடுதூது

கிளிகளைத் தூது அனுப்புகிறார் தாசர். பாண்டவ சகாயனும் வேங்கடத்துள் நின்றவனும் ஆகியவன் திருவேங்கடத்தான். அந்தப் பஞ்சாயுதக் கடவுளின் திருவடிகளில் தான் வைத்த அன்பினைப் போய்ச் சொல்லுங்கள் என்று கிளிகளைக் கூறி, அதற்குத் தருமம் உண்டாகும் என்கிறார்.

## மக்களுக்குத் தான் விடுக்கும் வேண்டுகோள்

வேங்கடமலையானது, அடியவர்களின் பிறப்பறுத்து பரமபதத்தைத் தரவல்லது அவனின் பாதம். அதுபோல் உலகில் வாழும் மக்களனைவருக்கும் தருமம், இன்பம், செல்வம், மோட்சத்தைத் தர வல்லவன் என்று பெரியோர் சொல்லுவர். ஆதலால் மக்களனைவரையும் வேங்கடமலையானை வழிபட அழைக்கின்றார் தாசர்.

மனிதர்கள் அனைவரும் பொருளைச் சேர்த்து, மாதர்கள் சிற்றின்பத்தில் ஆழ்ந்து, அதற்கேற்பச் செலவு செய்கிறார்கள். அதனால் எந்தவித பயனும் இல்லை. அப்பனாகிய வேங்கடத்தான் பாரதயுத்தத்தின் போது அருச்சுனன் தேரில் நின்று, தன் சங்கை ஊதி மக்கள் யாவரையும் மயங்கும் படிச் செய்தவன். அப்படிப்பட்டவனையே சார்ந்து மகிழ நினையுங்கள். அதனால் பெரும்பயன் விளையும் என்கிறார்.

மாதர் சொற்களைப் புகழ்ந்து, அவர்களுக்கே அடிமையாய்க் கிடக்கும் மனிதர்கள், அவர்களால் கிடைக்கும் இன்பம் இன்பமில்லை துன்பமேயாகும் என்பதை உணர்வார்கள். துன்பமில்லாத அழியா வாழ்வு வாழ வேண்டுமாயின், இரணியனை கொன்றவனும், மல்லரை அழித்தவனுமான திருவேங்கடநாதனை வாழ்த்தவேண்டும் என்கிறார்.

## வேங்கடேசற்குக் கூறிய தலப் பெயர்கள்

திருவேங்கட பெருமானுக்கு உறைவிடங்களாவன,

"அரங்க குடந்தை குருகூர் குறுங்குடி யட்டபுய

கரங்கண்ண மங்கை நறையூர் கடன்மல்லை கச்சி கண்ண

புரங்கண்டி யூர்தஞ்சை மேலிருந் சோலைபுல் லாணி மெய்யந்

தரங்கம் பரமபதம் வேங்க டேசற்க்குத் தாங்களே" (திரு.வே.தி.55)

1.திருவரங்கம் 2. கும்பகோணம் 3. திருக்குருகூர் 4. திருக்குறுங்குடி 5. திருவட்டபுயங்கம் 6. திருக்கண்ணமங்கை 7. நாச்சியார்கோவில் 8. மகாபலிபுரம் 9. காஞ்சீபுரம் 10. திருக்கண்ணபுரம் 11. கண்டியூர் 12. தஞ்சாவூர் 13. அழகர்மலை 14. தருப்பசாயனம் 15. திருமெய்யம் 16. பாற்கடல் 17. வைகுந்தம் என்பதாகும்.

## முடிவுரை

ஆலிலையிலும், திருப்பாற்கடலிலும், ஆதிசேடன் இடத்திலும், நித்திரை செய்தருளியவன். இடையர் குலப் பெண்களின் முழு அன்பையும் பெற்றவன். உலகத்தை மயக்குவிக்கும் மாயையுடையவனும், கண்ணனென்றும் திருநாமம் உடையவனும் ஆகியவன் திருவேங்கடமலையான். தாசர் தன்னை மயக்குகின்ற வஞ்சனையானது நீங்கும்படி, அவரது திருநாமங்களையும் அவரது வாயால் உச்சரிக்கிறார். வேங்கடமலையானை தந்தையொப்பர் என்கிறார். தன்னைக் கைவிட நினைத்துத்தான் வேங்கடநாதன் ஐம்புலன்களுக்குத் தன்னை உணவாகக் கொடுத்தான். இறைவனை விட்டுத் திரிவது எப்படி என்று வேங்கடநாதனை நீங்காமல் வாழ வேண்டுகிறார்.

## References

Kaliya perumal, B. (1976) Andhadhi Ilakkiyangal, Manivasagar pathippagam, Chennai, India.

Pillai Perumal Iyengar, (1906) Thiruvenkadathanthathi, G.S Maniya & Company, Thanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License